பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620024

**Prof. L. Ganesan**
Registrar (I/C)

# BHARATHIDASAN UNIVERSITY
**TIRUCHIRAPPALLI - 620 024**
**TAMILNADU, INDIA**

*(Accredited with A+ Grade by NAAC in the Third Cycle)*

கடித எண்.கல்வி உதவித்தொகை பிரிவு/**2022-2023** நாள்: 26.08.2022

பெறுநர்

பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்து கல்லூரி முதல்வர்கள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: கல்வி உதவித்தொகை பிரிவு – கல்வி உதவித்தொகை புதிய நடைமுறை - புதுப்பித்தல் மற்றும் புதிய விண்ணப்பங்கள் - மாணவர்கள் பதிவேற்றம் செய்து பதிவிறக்கம் செய்து கல்லூரியில் ஒப்படைக்க அறிவுறுத்துவது – தொடர்பாக.

பார்வை:
1. 04.07.2022 நாளிட்ட சென்னை, சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்.எல்2/**11795/2002**
2. 23.06.2022 நாளிட்ட துணைவேந்தரின் ஆணை
3. 26.07.2022 நாளிட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் கடித எண்.பா7/**24877/2022**
4. 28.07.2022 நாளிட்ட துணைவேந்தரின் ஆணை

---------

பார்வை 1ல் காணும் ஆதிதிராவிட நல இயக்குனரின் கடிதம் மற்றும் துணைவேந்தரின் ஆணைப்படி, 2022-2023 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக இணைவு பெற்ற அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் / பயிலும் மாணவர்கள் அனைவரும் ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை பெற தகுதியுள்ள மாணவர்கள் அனைவரும் கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றி விண்ணப்பிக்க வேண்டும்.

1. 2022-2023 கல்வியாண்டு முதல் ஒன்றிய அரசின் புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறையின்படி, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் அனைத்து புதிய மற்றும் புதுப்பித்தல் மாணவர்கள் அனைவரும் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (**National Scholarship Portal**) விண்ணப்பித்து தேசிய அளவில் வழங்கப்படும் அடையாள எண் பெறவேண்டும்.
2. அடையாள எண் பெற மாணவர்கள் அனைவரும் 10ம் வகுப்பு கல்விச்சான்றிதழில் உள்ளவாறு மாணவரின் பெயர் தேசிய ஆதார் அடையாள அட்டையிலும் இருக்க வேண்டும். பிறந்த தேதி, பாலினம், தந்தையார் பெயர் அதில் இருக்க வேண்டும். ஆதார் எண்ணுடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கணக்கு இணைக்கப்பட வேண்டும். வங்கிக்கணக்கு மாணவருடைய பெயரில் இருக்க வேண்டும். இக்கணக்கு செயல்பாட்டில் இருக்க வேண்டும். கல்வி உதவித்தொகை மாணவரின் வங்கி சேமிப்புக் கணக்குக்கு நேரடியாக இயக்ககத்தால் செலுத்தப்படும்.

...2.

3. 2022-2023 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை பெற தகுதியுள்ள அனைத்து மாணவர்களும் அடையாள எண் பெற்ற பின்னர் தமிழக அரசின் கல்வி உதவித்தொகை Tamilnadu e-District Services http://escholarship.tn.gov.in இணையதளத்தில் புதியது மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பத்தை **(Fresh and Renewal application)** புதிய நடைமுறைப்படி மாணவர்களே பதிவேற்றம் செய்து சமர்பித்த (Submit) பின்னர் பதிவிறக்கம் (Download) செய்து இணைப்புகளுடன் சார்ந்த கல்லூரியிலேயே ஒப்படைக்க வேண்டும். அதன் பின்னர் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு வழங்கப்படும்.

4. பல்கலைக்கழக மானிய குழுவின் விதிகளின்படி பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் 2022-2023 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க ஏதுவாக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகளிலும் **Scholarship Facilitation Centre** என்ற அமைப்பினை ஏற்படுத்தவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கென **SC & ST Cell** யினை அமைத்து பற்றாளர் **(Nodel Officer)** ஒருவரை நியமிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. விடுதல்கள் இன்றி மாணவர்கள் பதிவேற்றம் செய்வதை பற்றாளர் உறுதி செய்ய வேண்டும்.

5. சாதிச்சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் தமிழ் நாடு அரசு வருவாய்த் துறையால் இணையவழியாக வழங்கப்பட்ட சான்றிதழ் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். முதலாமாண்டு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்கப்படும் வருமானச் சான்றிதழ் அனைத்துக் கல்வியாண்டிற்கும் பொருந்தும்.

6. பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் சேர்க்கை பெறும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களின் சாதிச் சான்றிதழில் பிற்படுத்தப்பட்டோர் **(BC)** என இருந்தாலும் அவர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் பொருந்தும் என்பதால் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை **(Scheduled Caste Converted to Christianity)** விடுதல் இன்றி பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்யவேண்டும். ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும்.

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620024

**Prof. L. Ganesan**
Registrar (i/c)

BHARATHIDASAN UNIVERSITY
TIRUCHIRAPPALLI - 620 024
TAMILNADU, INDIA

*(Accredited with A+ Grade by NAAC in the Third Cycle)*



பார்வை 3ல் காணும் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின அலுவலரின் கடிதத்தில், கல்வி உதவித்தொகை பெற தகுதியுடைய அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்களும் மேற்கண்ட நடைமுறையை பின்பற்றி பள்ளிச் சான்றிதழில் உள்ளவாறு ஆதார் அட்டையில் பெயர், பிறந்த தேதி, பாலினம் மற்றும் தந்தையார் பெயர் இருக்க வேண்டும். ஆதார் எண்ணுடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி சேமிப்புக் கணக்கு இணைக்கப்பட வேண்டும். வங்கிக்கணக்கு மாணவருடைய பெயரில் இருக்க வேண்டும். இக்கணக்கு செயல்பாட்டில் இருக்க வேண்டும். மாணவரின் வங்கிக்கணக்கு கல்வி உதவித்தொகை இயக்ககத்தால் செலுத்தப்படும்.

எனவே, மாணவர்கள் ஆதார் எண்ணில் திருத்தம் செய்ய ஏதுவாக தங்களது கல்லூரியில் ஆதார் சிறப்பு முகாம் அமைத்து அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் செயல்படவும், கல்வி உதவித்தொகைக்கான நடைமுறையை மாணவர்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் அறிவிக்கை செய்யவும் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

பேரா. கணேசன்
பதிவாளர்.
5/5